Written by Administrator
Thursday, 18 June 2009 07:10 - Last Updated Thursday, 18 June 2009 08:03

□□□□□□□□ 17.06.2009

தலைமை செயலகத்தில் முதல்வர் கருணாநிதி, ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க முனைப்புடன் செயல்பட்ட துணை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தங்கப்பதக்கம், பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி சிறப்பித்தார்

குடிநீர் திட்டத்தை விரைந்து முடித்த

ஸ்டாலினுக்கு தங்கப்பதக்கம் அணிவித்தார் கருணாநிதி

அதிகாரிகளுக்கு பரிசு

சென்னை, ஜூன் 17. ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரைந்து முடித்ததற்காக, தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலினை முதல்வர் கருணாநிதி பாராட்டி தங்கப் பதக்கம் அணிவித்தார். சான்றிதழும் வழங்கினார். அனைத்தொடர்ந்து துணை முதல்வரின் செயலர் தனபத்து குடிநீர் வழங்கல் செயலர் நீரஞ்சன் மார்டு, குடிநீர் வடிகால் வாரிய தலைவர் லவரண சிங் ஆலியோருக்கும் முதல்வர் கருணாநிதி பாராட்டு சான்றிதழும், பதக்கமும் அணிவித்தார்.

இந்திட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் 220 பேருக்கு துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் சான்றிதழும், பதக்கமும் வழங்கி பேசியதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நிலத்தடி நீர் கப்பத்தலை கடைவது. இங்கு குடிநீர் ஆதாரங்கள் இல்லாத நிலையில், தொடர்ந்து அப்பகுதியில் குடிநீர் பற்றாக்குறை இருந்து வந்துள்ளது. முதல்வர் கருணாநிதி, மக்களின் குறையை அறிந்து பிரச்சனையை முழுவதுமாக தீர்க்குவதற்கு 30-01-07 அன்று அடிக்கல் நாட்டினார். கடந்த 11ம் தேதி இப்பணியை தொடங்கி வைத்து விட்டார்.

இருச்சி காவிரி ஆற்றுப் பகுதியை நீர் ஆதாரமாக கொண்டு இப்பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் மற்றும் இலங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் சில பகுதிகளும் உள்ள மக்கள் இத்திட்டத்தில் பயன் பெறுவார்கள்.

இத்திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய முதல்வர், இந்த திட்டத்தை 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டுகளில் நிறைவேற்றினால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கு பரிசளிப்பதாக அறிவித்தார். அதுபோல விரைவாக முடிக்க செயல்பட்டவர்களுக்காக இன்று முதல்வர் பதக்கங்களையும், பாராட்டு சான்றிதழையும் வழங்கி உள்ளார்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.